ஓம்

குருபரன் காப்பு !

# சமயசாரம்

## சைவ சமய தத்துவ சாரம்

| சாரம் | தத்துவம் | தெய்வம் | மந்திரம் |
|---|---|---|---|
| | | | |
| ஒரே சொல் | பரம்பொருள் | பராசிவம் | நமசிவாய |
| 2.சொற்கள் | சிவம் சக்தி | பராசக்தி | சிவாயநம |
| 3.சொற்கள் | பதி பசு பாசம் | கணதி | ஓம் கணபதி ஓம் |
| 5.சொற்கள் | ஆணவம் கர்மம் மாயை நாதம் விந்து | | |
| | | | |
| இச்சாசக்தி; கிரியாசக்தி; ஞானசக்தி | | முருகன் | ஓம் சரவணபவ ஓம் |
| 36 வேடங்களின் உணர்வு | | குரு | ஓம் குருதேவாய நம ஓம் |

இவற்றை விரித்தால் ஆறாறு; முப்பத்தாறு காண்டங்கள் (வேடங்கள்): அஃதாவது தோற்றமும் ஒடுக்கமும் உள்ள தன்மை - சிவதாண்டவம்.

36 காண்டங்களாவன - இறை காண்டம் 5: போக காண்டம் 7: ஆத்ம காண்டம் 24.

இறை காண்டங்கள் 5 :- சிவ காண்டம்; சக்தி காண்டம்; சதாசிவ காண்டம்; மகேசுவர காண்டம்; தர்ம காண்டம்.

போக காண்டங்கள் 7 :- மாயை; காலம்; நியதி; கலை; வித்தை; பற்று; ஆன்மா.

ஆத்ம காண்டங்கள் 24 ஐயும் 5 பிரிவுகளாகப் பார்பது சுலபம்:
அந்தக்கரணங்கள்-4; புலன்கள்-5; கர்மேந்திரியங்கள்-5; ஞானேந்திரியங்கள்-5; பூதங்கள்-5; ஆக 24.

அந்தக்கரணங்கள் 4 - சித்தம்; புத்தி; அகங்காரம்; மனம்.

புலன்கள் 5 - செவி; தோல்; கண்; நாவு; நாசி.

கர்மேந்திரியங்கள் 5 - சொல்லல்; நடத்தல்; கொடுத்தல்; கழித்தல்; காமுறல்.

ஞானேந்திரியங்கள் 5 - சுவை; ஒளி; ஊறு; ஓசை; நாற்றம்.

பூதங்கள் 5 - மண்; நீர்; தீ; வளி; விண்.

பிரபஞ்சம் - அகம்; புறம்.

உலகங்கள் 3 - கதைகளிலும் புராணங்களிலும் பூவுலகம் பாதாளம் தேவுலகம் நரகம் சுவர்க்கம் என்றெல்லாம் வரும். ஆயின் தத்துவத்தில்:

மண்ணுலகம் - உருவம்- பிரகிருதி - ஊனக்கண்ணுக்கு புலப்படுவன தெரியாதன எல்லாம்.
நுண்ணுலகம் - அருவுருவம்- சூட்சும உடலினர்; அந்தராத்மாக்கள்; பிதிரர்; கணங்கள்
விண்ணுலகம் - அருவம் - சிவசக்தி; தெய்வீக உறைவிடம்; பரிணாமமற்ற உலகு

குணங்கள் 3 - சாத்துவிதம்(பரிசுத்தம்); இராசதம்(ஆர்வம்); தாமதம்(மந்தம்).

சிவசக்தி 3 - இச்சா சக்தி(கருத்து); கிரியா சக்தி(செயல்); ஞான சக்தி(அறிவு)

பரிபூரணம் - குறைவற்ற நிறைவும் - நிறைவற்ற நிறைவும்!

சூன்யம்; - எல்லாமாய் அல்லவுமாய்

சைவர் - ஆதியும் அந்தமும்

ஒரு முறை சைவத்தின் உச்சத்தை சித்தர் சொல்லக் கேட்போம்;

சித்திலே சிவமொ டுங்கச்
சிவத்திலே சித்தொ டுங்க
வுய்த்தவிவ் விரண்டு மற்ற
வுண்மையே வுண்மை........

மற்றுப்பற்றை நீக்கு
கருவழியைக் கட
சும்மா இரு
வெளியிலே ஒளிகாண்

சைவசமயத்தில் மேலும் நம்பிக்கை வழிபாடு; படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல்; மகாபிரளையம்; மனக்கருத்து, உள்ளுரு; தந்திரம், யோகம், ஞானம், முக்தி; சத் சித் ஆனந்தம் எனப் பலவும் உள்ளடங்கும்.

வாழ்க !